உ

பசுபதிதுணை.

பூகயிலாயமென்றுபுகழ்பெற்ற

சங்கரநாராயண சுவாமிகோவில்

மான்மியம்.

967

இஃது

கத்தியரூபம்.

ஸ்ரீவில்லிபுத்தூரில்வசிக்கிற

ஆந்திர-திராவிட ஸம்ஸ்கிருத வித்துவான்

ம-ள-ள-ஸ்ரீ.

இராமானுஜய்யங்காரவர்கள் குமாரர்

M. R. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களாலும்

ம-ள-ள-ஸ்ரீ.

வடிவுநாயகம்பிள்ளையவர்கள் குமாரர்

S. V. பேச்சியப்பபிள்ளையவர்களாலும்

இயற்றியது.

27 JAN 1899

சென்னை—ஜீ,

ரஞ்சனிவிலாச அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1898

ரிஜிஸ்டர்ட் காப்பிரயிட்.

உ

பசுபதிதுணை.

பூ கயிலாயமென்றுபுகழ்பெற்ற
சங்கரநாராயண சுவாமிகோவில்
மான்மியம்.

இஃது

கத்தியரூபம்.

ஸ்ரீவில்லிபுத்தூரில்வசிக்கிற

ஆந்திர-திராவிட ஸம்ஸ்கிருத வித்துவான்

ம-ள-ள-ஸ்ரீ,

இராயிலுவய்யங்காரவர்கள் குமாரர்

M. R. ஸ்ரீநிவாஸய்யங்கா ரவர்களாலும்

ம-ள-ள-ஸ்ரீ,

வடிவுநாயகம்பிள்ளையவர்கள் குமாரர்

S. V. பேச்சியப்பபிள்ளை யவர்களாலும்

இயற்றிச்.

சென்னை - சூளை,

நிரஞ்சனிவிலாச அச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1898

ரிஜிஸ்டட்டர் காப்பி ரயிட்.

முகவுரை.

ஸ்ரீகயிலாயமென்று புகழ்பெற்ற சங்கரநாராயண சுவாமிகோவில் மான்மியம் வடமொழியிற் பவுஷியோத்தர புராணத்திற் கூறப்பட்டுள்ளதைச் சிவலமாற பாண்டியனாலும் பு. முத்துவீரக்கவிராயராலும் தென்மொழியிற் பத்தியரூபமாக (செய்யுள் ரூபமாக) இயற்றப்பட்டிருப்பதில் செய்யுள் பண்டிதர்க்கன்றி மற்றவர்களுக்குப் பயன்றரா திருப்பதைக் கருதியும் பலமுக்கிய சின்னங்களுடனும் எவர்களுமிச்சிக்கத்தக்கதாய் இனிய செந்தமிழில் கத்தியரூபத்தில் (வசனரூபத்தில்) "சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்" என இப்புத்தகம் வரையலாயிற்று.

ஸ்ரீ வி. வ. பே.

உ

பசுபதிதுணை.

பொன்னகவிற்செங்கைப் புனிதனுடனம் புயத்தார்
பொன்னகம்வாழ் மாலும் பொருந்துருவம் மன்னெழிலார்
சங்கரனார் கோவிற்றல மகிமையைப்புகல
வைங்கரனார் தாளேயரண்.

நாட்டுவளம்.

கடல்சூழ்ந்த பூவுலகத்திலுள்ள புனிதமான தபோவனங்களிற் சிறப்புற்றோங்கிய நைமிசாரணிய வாசிகளான மாமுனிவர்களைக் காணும் பொருட்டுச் சகல புராணங்களையும் வரைந்த சூதப்பிரமரிஷி ஓர் நாளாங்கணுகினர் அவரைக்கண்ட நைமிசாரணிய வாசிகளெல்லா மானந்தசாகரத்தில் மூழ்கினவர்களாய் அவர்க்காசன மளித்தும் அர்க்கியபாத்திய ஆசமனாதிகளா லுபசரித்தும் அவரால் ஆசிர்வதிக்கப் பெற்றும் நிற்கையில் அம்முனிவர்கள் சூதனைநோக்கி முனி மணியே! இப்பூவுலகங்களிலுள்ள புண்ணிய

க்ஷேத்திரங்கள் பலவற்றின் காதையை முன்னர் நீவிர் விளக்கக்கேட்டிருந்தோமாயினும் எத்தலத்தில் மாபதியுமாபதியோடோருருத்தாங்கி யடியார்க்கருள் புரிகின்றனர். அத்தல மகிமையைக்கேட்க ஆவல் கொண்டிருக்கின்றோம் திருவுளம் பற்றவேண்டு மென்று வேண்டினர். சூதமுனிவர் மகிழ்ந்து சிவபிரானைத்தொழுது கேண்மின்முனி சிரேஷ்டர்களே! என்றெட்டினு மேம்பட்ட தென்னாரிய நாட்டின்கண் தெய்வமொழியென்னும் வடமொழிக்கு நிகரான மகிமைபெற்ற தமிழையருளிய அகத்திய முனிவர்வாழும் பொதிய மலையையுடைய பாண்டிநாடு திலகம் போல் விளங்குகின்றது. அந்நாட்டின் சிறப்பைச் சொல்ல ஆதிசேஷனாலுங் கூடாது. ஆயின் என்னொரு நாவாற் சொல்லத்தக்கதோ அன்றெனினும் உங்கள் விருப்புக்கு மறுப்பின்றிக் கூடியவரை சொல்லுகின்றேன், அந்நாட்டிலுள்ள மலைய மலைமுதலிய பருவத சிகரங்களில் நீலமணி முடிகவிந்ததுபோல் மேகங்கள் தங்கி யுத்தவீரர்கள் வாள்வீசுவதுபோல் பளீர் பளீரெனமின்னித் திசைகளதிரக் குமுறிகொடையிற் சிறந்த முதல் வள்ளல் சற்பாத்திரமறிந்து கனகமாரி பொழிவதுபோல் மளமளவென்று தாரை தாரையாய்ப் பொழியும் அப்படிப்பொழியும் உதகமானது விலைமகள் அரசனைத்தழுவி அவனிடமுள்ள விலையுயர்ந்த பொருளையெல்லாம் கவர்ந்துகொண்டு தன்னிருப்புக்குச் செல்வதுபோல யானைக்கொம்புகளையும் சந்தன மரங்களையும் நவரத்தினங்களையும் பொன்மணலையும் செண்பகம் முதலிய மலர்களையும் முட்கனிமுதலியநானாவித பழவர்க்கங்களையும் வாரிக் கொண்டு கூடைழுயாறெனப்பெயர்பெற்று அப்பாண்டி

நாட்டிற் பிரவேசிக்கின்றது. அந்நதி ஜலத்தை உழவர்குழாம் குட்டை, குளம், கால்வாய்கள் வழியாகக் கழனிகளிற் பாய்ச்சிக் கன்னல் செந்நெல் கதலி மஞ்சள், இஞ்சி, முதலியவற்றைப் பயிரிடுவார்கள். அப்பயிர் நல்லோரகங்களில் அறம் வளர்வதுபோல் வளர்ந்து அவ்வுழவர் எதிர் நோக்கியதற்கு மும்மடங்கு பலனைக் கொடுக்கும், அப்படி விளைந்துவந்த தானிய முதலியவைகளை ஆறு கூறுக்கி ஒருபங்கு அரசர்க்கும் ஒருபாகம், பிதிர்த்தேவதைகளுக்கும் ஒருபாகம், தெய்வத்திற்கும் வேறொரு கூறு விருந்தினர் களுக்கும் பின்னொருபங்கு கிளைஞர் களுக்கும் உபயோகித்து எஞ்சியதோர் பாகத்தைத்தா மனுபவித்திருப்பர். இம்மட்டோவளம், அந்நாட்டிலுள்ள நெற்பயிர் கரும்பென வளரும் கரும்பு கமுகென வோங்கும் பூகம்தென்னையெனப் பருத்துயரும்தென்னையுயர்ந்து கற்பகச்சோலையிற் கனிகளையுதிர்க்கும், சோலைகள் உயர்ந்த கற்பகமென்னக் கழறுதற்கும் முக்கனிகள் சிதைந்து ஊறுந்தேனும் அரும்பவிழ்ந் தொழுகும் நறுமணத்தேனும் ஆலைகளினின்றோடும் கருப்பஞ்சாறும் ஆற்றின் நீருடன்சேர்ந்து ஓடிச் சமுத்திர ஜலத்தையு மினியதாக்கும்.

நகர்வளம்.

அத்தகைய நாட்டின்கண் அணிநகரங் களுக்குள் மணிபோல்விளங்கும் சீர்சை என்னுந் திருநகரொன்றுண்டு, அந்நகர் அநேகமாயிர மிருடிகள் புன்னைமர வுருவந்தரித்துத் தவம்புரிந்ததால் புன்னைவனமென்றும், உமையவளுக்குத் தானுந்திருமாலுந்தன்

தென்பகைத் தோற்றுவிப்பதற்காகச் சங்கரன் நாரா
ணனுருப்பாதியாகத் திருவுருத்தாங்கிக்காட்சியளித்த
தால் சங்கரநாராயணர் கோவிலென்னும்பெயர்பெறும்.
அந்நகரைச்சுற்றிய வரம்புபோன்ற பொழிலும் நடு
நடுவேயுள்ள புன்னைமரங்களும் ஒருவாறு சூரியனை
யுந் தடுக்கத்தக்கது. ஆங்கு எப்பவமும் வெளிதி லகற்
றும் நாகதீர்த்தமும் ஏனைய தீர்த்தங்களும் நதியும்
எவர்கள் பார்க்கப்பெறினும் பவமுழுதும் நீக்கத்தக்
கது. இந்நகர் நடுவே பன்னகாபரணன் கோவிலும்
வான்வரையுயர்ந்த அக்கோவிலின்மதிலும் திருக்கோ
புரமும், கனகசபையும் திருப்புற்று முதலியவைகளும்
தெருக்களில் பொன்வரையோவென்று புகழத்தக்க
மகாமேருக்களும் ஆலயத்தின் தென்மேற்குத் திக்கி
லுள்ள எம்மாவுடையம்மை தபசு மண்டபமும்
தென்பக்கமுள்ள மணிக் கிரீவன் (காப்பனையன்)
கோவிலும் கிழக்கே சன்னிதானத்தி னெதிரேயுள்ள
அங்குரா விநாயகர் திருக்கோவிலும் எட்டுத் திக்குகளி
லும் இந்திரன் முதலிய திக்குப்பாலர்கள் பீடங்களும்
தெருக்கடோறு முயர்ந்து பிரகாசிக்கின்ற சத்திரங்க
ளும்மண்டபங்களும் மாடமாளிகைகளும் ஆங்காங்கு
வரையப்பட்டுள்ள ஓவியங்களும் அமைத்துள்ளபது
மைகளும் தேவசிற்பியும் சிரம் நான்குடையதேவும்
வியக்கத்தக்கது அக்கோபுர முதலியவைகள் எந்நாடு
வரை தோன்றுகின்றனவோ அந்நாடு முழுமையும் புண்
ணிய க்ஷேத்திரமாகவே புகலப்படும். அக்கோபுரத்தி
லுள்ள மணியானது அடியாருடைய கொடும்பாவமா
கிய பேய் ஓடிவிட்டது ஓடிவிட்டது என்பதுபோலக்
கணகண வென்று ஒலித்துக்கொண்டே யிருக்கின்
றது. வேதியர்வீதிகளில் நான்மறையோது முழக்க

மும் பலவகையான வேள்விகளைச்செய்து வானவர்க் கவிர்ப்பாகம் கொடுக்கக் கூவுமொலியும் எப்பொழு தும் நிறைவுற்றே யிருக்கின்றது. அவ்வந்தணர்தமக் கேற்பட்ட ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித் தல், ஈதல், ஏற்றல, ஆகிய ஆறு தொழில்களையும் முறைபிறழாது நடத்திவருகிறார்கள். மற்றைய மூக் குலத்தவர்களும் அவ்வாறே தத்தம் வருணச்சிரம தருமங்களினின்று கொஞ்சமேனும் வழுவாத வர்க ளாய் பிராமணரிடத்தும் அடியாரிடத்தும் மற்றும் பெரியோரிடத்தும் விசுவாச முள்ளவர்களா யிருக் கின்றார்கள். துறவறம்பூண்ட சிவனடியார்கள் அந்த ரங்க விசுவாசமுள்ளவர்களாகியும் அஷ்டாங்கயோகம் பிராணபந்தனயோகம் முதலியவைகளில் மேம்பட்ட வர்களாகியும் இருவகைப்பணத்திலும் தேட்டமற்ற வர்களாகியும் சிலர்சடையையும் அறத்தையும் வளர் த்தும் சிலர் சிகையையும் ஐம்புலன்களையும் முண் டனம்செய்துமிருக்கின்றார்கள். மங்கையர்கள் அரம் பையரிலும் மிரம்பிய சவுந்தரிய முடையவர்களா யிருக்கின்றார்கள். ரிஷிகளே இன்னும் அந்நகர வர் ணனை விரிக்கிற் பெருகுமென்று சுருக்கினேனெனச் சொல்லி நிறுத்தினர். நைமிசாரண்ணிய ரிஷிகள்பின் னும் சூதரை வணங்கி அந்தத்தலமகிமையை யெங் கட்கோத வேண்டுமென வேண்டினர்.

தலமகிமை.

சூதர் எத்தலத்தினு முயர்ந்த அத்தலமகிமை யைய ஒமோமனதுடன் கேளுங்கள் நைமி சாரணியரி ஷிகளே என்றுசொல்லிக்கொண்டுசொல்லுவார் அத் தலத்திலிருந்து, சரியையிற் சரியைவழுவாது நடத்

தினவர்கள் ஞானசரியையின் பலனையும் சரியையிற் கிரியை நடத்தினவர்கள் ஞானகிரியையின் பலனையும் சரியையோகிகள் ஞானயோகபலனையும் சரியை ஞானிகள் ஞான ஞானத்தின் பலனையுமடைவார்கள். அச்சங்கரேசுரர்க்கேனும் கோமதி யம்மைக்கேனும் கோபுரங்கள் மண்டபங்கள் விழா முதலியவைகள் இயற்றுவித்தவர்கள் சிவசாயுச்சியம் பெறுவார்கள். ஆங்கு அன்னதானம், கோதானம், பூதானம், கன்னிகாதானம் முதலியவைகள் செய்யப்பெறின் இந்திரவுலகம்புகுவர். ஆதிவாரமுதலாய்ச்சொல்லப்படுகிற எத்தினத்திலாவது ஆங்கு சங்கர நாவுடையைநினைந்து நோன்பு செய்தவர்கள் அத்தினத்துக்குரிய கோள்களின் துன்பங்கள்நீங்கித்தபசிகளாவார்கள் அங்குள்ள நாகசுனையில் ஒருதினமேனும் முழுகில நூறுபுண்ணியதீர்த்தங்களில் மூழ்கியபலனைத்தரும். கொலை, களவு, கள், காமம், குருத்துரோகம், என்னும் பஞ்ச பாதகமும், பிராமணநிந்தைபசுவதைமுதலியகொடும் பாதகமும் ஒருங்கே செய்தமகாபாதகரும் உரகதீர்த்தம் படிந்துபெருமருந்தாய அருமருந்தனைய புற்றுமருந்தையருந்தி அத்தலத்தில் நோன்பியற்றினல்பவமனைத்தும் நீங்கிச்சுவர்க்கம் புகுவர். முத்தாதுகளில் எத்தாதுகுணங்கியாவது முன்னாட்செய்த கன்மத்தாலாவது வந்துவருத்தும் எவ்வகைரோகமும் புற்றுமருந்தை அணுவளவாவதுஉ[illegible] ருந்தி[illegible] அச்சங்கர நாவுடையை யுளமமைத்து வழிபடுவார்களாயின் அந்தரோகங்கள் நீங்கிப்புனிததேகந்தாங்கி நற்போகங்கள்ஓங்கி இம்மைமறுமைப் பயனையடைவார்கள். ஏனைய க்ஷேத்திரங்களிற் சிலதவம்செய்தார்க்கும் சில பிறந்தார்க்கும் சில வசித்தார்க்கும் சிலசிந்தித்தார்க்

கும் சிலதினைத்தார்க்கும் சில இறந்தார்க்கும் முத்தியைக்கொடுக்கும் அத்தலமானது கேட்கப்பெறினும் முத்தியைக்கொடுக்கும் அத்தலத்தில் உமையவளும், தேவர்களும், முனிவர்களும், பன்னகவரசர்களும் தவம் செய்து இஷ்டசித்திகளையடைந்த தலமாகையால் அதனினும் மேம்பட்டதல மில்லவேயில்லை எனக்குவியாசன் தேவபாஷையிலுள்ள பவுஷியோத்தர புராணத்தின்வாயிலாக, முன்சொல்லிய அத்தலதீர்த்தமகிமை, மூர்த்திமகிமை, சங்கர நாராயணரானமகிமை, அத்தலத்தில் முத்தியடைந்த எத்தனையோ பத்தர்களுள் உக்கிரன்வழிப்பட்ட சரிதம், தக்கனை தவம்புரிந்தசரிதம், வீரசேனனென்னும் அரசன்தவம்செய்து பிணிதீர்த்தசரிதம், அயிராவதத்தண்ணல் சேயாய்சயந்தன் காக்கையுருக்கொண்டு சீதாபிராட்டியின் இளமுலைதொட்டவாற்றால்வந்தமாபாதகம் தீர்த்த சரிதம், கானவனுய வேடுவன்கதிபெற்றசரிதம், பசுவைக்கொன்ற கன்மாடன்பதவியடைந்தசரிதம் இவைகளே சான்று என்னச்சொல்லலும் நைமிசாரணியர்கள் அப்படியாயின் அவ்வுரகதீர்த்தமகிமையையும் எங்கட்கோதவேண்டுமென்று அஞ்சலித்தகையுடன் மயிர்ப்புளகந்தரிக்கு ஆவலோடுங்கேட்கச் சூதப்பிரமரிஷி,

தீர்த்தமகிமை.

அத்தலத்தில் சிவபிரானது திருக்கோவிலின் முன்பாக இடப்புறத்தில் முன்னர்சொல்லிய நாகசுனை என்னும் புண்ணியதீர்த்தமிருக்கின்றது முன்னொருநாள் சங்கன், பத்மன் என்னும் பன்னகவரசரிருவரும் முக்கட்பிரானைத் தொழுதற்பொருட்டு அச்சுனையிற்சிலபாகந்தோண்டி ஸ்நானம்பண்ணினதினுல் அதற்கு

நாகசுனையென்னும் திருநாமம் அமைந்தது (நாகசுனையில்தென்மேற்கில் ஓர்கிணறும் அதின் மேற்சுவரில் ஓர் பெரும்புடையுமிருக்கின்றது அதுதான் நாகங்கள் தோண்டினதாம் அதற்குள் அதன் ஞாபகார்த்தமாக அதில் தங்கத்தினாலும் வெள்ளியினாலும்செய்த சர்ப்பங்களைப்பெற்ற ஓர்பெட்டகம் இப்போதும் வைக்கப்பட்டிருக்கின்றது. அநேக ஆண்டுக்கொருமுறை அப்பெட்டகத்தை எடுத்துப்பூஜித்து ஊர்கோலம்வந்து மறுபடியும் வைப்பது வழக்கம். அதுநாகதீர்த்தமாயிருப்பதினால் மீன்முதலிய நீர்வாழும்செந்துக்கள் அச்சுனையின்கணில்லா அத்தீர்த்தத்தில் மூழ்கு கிறவர்களுக்கு குஷ்டமுதலிய சகலநோய்களும் நிவர்த்தியாகும் அந்தப்புண்ணிய தீர்த்தத்திற் படிந்தவர்களிடத்துள்ள ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம், என்னும், மூவகைவினைகளும் பறந்துவிடும் அந்நாகசுனையின், மான்மியம் அறியாதவர்களாயினும் அத்தீர்த்தத்தைக் கையினாற் பரிசித்தாலும் உள்ளும்புறம்புநின்மலராய்ச்சிவசாமீப்பிய பதவியையடைந்து களிப்பார். அப்புண்ணியதீர்த்தத்தை யணுகிமூழ்குவதற்குப் பாத்திரரல்லாத இழிகுலத்தோர் மீது உயர்குலத்தவர் அச்சுனையின் நீரையெடுத்து வீசினால் இழிகுலத்தார் மறுபிறப்பில் உயர்குலத்தாராகவே பிறப்பர். மாதப்பிறப்பு முதலிய பருவகாலங்களிலும் பாதாந்தச்சுக்கிரவாரங்களிலும் அத்தடாகத்தில் மூழ்கினவர்கள் இம்மையிற் சகல வின்பங்களையு மனுபவித்து மறுமையில சிவசாரூப்பியபதவியையடைவார்கள், சந்திரகிரகணம்,சூரியகிரகண முதலிய, புண்ணியகாலங்களில்பிராமணசிரேஷ்டர்களால் சங்கற்பம் செய்விக்கப்பெற்று ஸ்நானம். செய்து அந்தணர்க்குப் பலதானங்களைச்செய்வோர்

அநேககோடிகாலம் அஷ்டலக்ஷுமிகளையும் இஷ்டமா யடைந்து இந்திரபோகம்அனுப வித்து முடிவில் சிவ சாயுச்சியமடைவார்கள். இனி ஆங்கமைந்துள்ள மூர் த்திமகிமையைக் கேளுங்கள் முனிவர்களே !

மூர்த்திமகிமை.

அவ்விடத்தில் சிவபிரான் அன்பர்களுக் கெல் லாம் மங்களமருளுவதால் சங்கரலிங்கமெனத் திரு நாமம்பெற் றிருக்கின்றனர். ஐந்துவகை லிங்கங்க ளில் பிருதிவி லிங்கமாகிய அச்சங்கர லிங்கத்தை ஞானத்தில் முதிர்ந்தவர்களாகிய சித்தாதிகளும் வண ங்கித் தருமார்த்தகாம மோக்ஷங்களை யுற்றார்கள். திரி கரண சுத்தியாக அம்மூர்த்தியைத் தியானிப்பவர் பிற விப் பெருங்கடலை யெளிதில் நீந்தவல்லராவர் சோம வாரத்தன்று தெரிசித்துக்கூவிளந்தளிர்களால் அருச் சனைபண்ணிஒருபோதுணவுடன் இரவுமுழுதும் அம் மூர்த்தியின் திருநாமசங் கீர்த்தனம்பண்ணிப் பஜனை செய்தவர் புடவியெல்லாம் ஒரு குடைக்கீழாளும் அரசராவர் திருமாலுந்தாமும் ஒன்றென்பதை ஆடி மாதம் பூரணையில் ஆவுடையம்மைக்குக் காட்டியரு ளிய மகிமையுன்னுபவர் அச்சிவபிரானது பூரணகடா க்ஷத்திற்கு இலக்காவர். பஞ்சமகா பாதகங்களையே நித்தியத் தொழிலாகக் கொண்ட புல்லர்களேனும் அச்சங்கரலிங்கத்தின் சன்னிதானத்தை யணுகுவார் களேயாயின் மெய்த்தவம்பூண்ட யோகியராவர் பிர தோஷகாலத்து அந்திவேளையில் அப்பரமனை வலம் வந்து வணங்குபவர் யமனைவென்று மார்க்கண்டனை னத்தீர்க்காயுளுறுவர். அச்சங்கரலிங்கத்தைஒருமண்

டலமேனும் விடாது ஏகாங்க, திரியாங்க, பஞ்சாங்க, அஷ்டாங்க, நமஸ்காரம் செய்தவர்கள் காமம், குரோதம், லோபம்,மோகம்,மதம்,மாச்சரியம் ஆகிய அறுவகையுங்கடிந்து மனோவாக்குகளுக் கெட்டாத உன்னதபதவியை யடைவார்கள். அச்சங்க ரேசுபரர்க்கு கஸ்தூரி,புழுகு,குங்குமப்பூ,பனிநீர் முதலியவைகள் சேர்ந்த கலவையினால் முழுக்காப்புச் செய்தவர்கள் தெய்வலோகத்தில் உருப்பசி, அரம்பை, மேனகை, திலோர்த்தமை,முதலிய தெய்வமாதர்கள் கற்பகப்பூமாலைகளைச்சூட்டிப் பரிமளகந்தங்களைப் பூசச் சுகித்திருப்பார்கள். அவ்விலிங்கத்துக்கு சங்காலிங்கம் வாராசைநாதன் சீராசைநாதன் வைத்தியநாதன்,புன்னைவனநாதன், கூழையாண்டி, சங்கரநாராயணன், சங்கரமூர்த்தி என்று எட்டுத்திரு நாமங்களுண்டு என்று முடித்தார். மறுபடியும் நைமிசாரணிய வாசிகளாகிய இருடிகளெல்லாம் வணங்கிச் சங்கபத்மர்களுக்குள்ளுண்டாகிய விவாதத்தை நிவர்த்திப்பதற்காக அம்மூர்த்தி சங்கர நாராயணராகவந்து காட்சிகொடுத்ததையெங்கட் கெடுத்தோத வேண்டுமென்று பிரார்த்திக்கச்சூதப்பிரமர்.

சங்கர நாராயணரானமகிமை.

தவத்திற்சிறந்த காசிபமுனிவர் பத்தினிகளிருவரில், கத்துரு, ஆதிசேடன்முதலிய சகல நாகங்களையும் வினதை கருடபகவானையும்பெற்றார்கள். அவ்வரவங்களுக்கும் கலுழனுக்கும் பகையுண்டாகி அநேகநாள் யுத்தம்நடந்து சமாதானமாயினபின், ஆதிசேடனும் வாசுகியும் முறையேதிருமாலுக்கும்பரமசிவனுக்கும் அணையாகவும் பூணாகவுமமைந்தார்கள். ஏனைய

கோமதி யம்மன்தபசு.

அரவங்கள் பாதலம்புகுந்தன புகுந்தபின்னர் பாதலத்திருந்த சங்கனும், பத்மனும், சகல தத்துவங்களையு மறியவேண்டி வாசுகியையும் அனந்தனையும் நோக்கித் தங்களுக் கியல்பாயுள்ள வாயுவையும் புசிக்காது நெடுநாளறிய தபஞ்செய்தனர். அத்தவபோக்கினியும் இருவர்முகத்தினின்று மெழும் விஷாக்கினியும் உலகமெலலாம் பரவிநிறைந்தன. ஏனைய அரவங்கள் அச்[illegible] சகிக்காது வாசுகியிடத்தும், ஆதிசேடனிடத்தும சென்று முறையிட்டனர் அவைகளைக் கேள்வியுற்ற வாசுகி, யனந்தன், பால லோசனனிடத்தும் கமல லோசன னிடத்தும், விடைபெற்றுப் பாதலம்புகுந்து ஆங்கு அருந்தவம்புரியும் சங்கபத்மர்களுக்கு வேண்டும் வரங்களையளித்து மீண்டும் வாசுகி வெள்ளியங்கிரியில் வீற்றிருந்தருளு மெங்கறைமிடற்றண்ணற்கும் பணியாகவும் அனந்தன் திருப்பாற்கடலில் விருப்பாற்றுயிலும் மணிவண்ணனுக்கு அணையாகவும் சென்றனர். அந்நாள்தொட்டுச் சங்கன் சங்கரனிடத்தும் பத்மன் திருமாலிடத்தும் அன்புபூண்டு, சங்கன், சங்கரன், பெரியவனென்றும் பத்மன் திருமால் பெரியன் என்றும் கூறினமையால் அவ்விருவருக்கும் நெடுநாள் விவாத முண்டாயிற்று. இவர்கள்விவாதங்களைக் கண்ட ஆங்குள்ள ஏனைய சர்ப்பங்களனைத்தும் உங்கள்வழக்குத் தீர்க்க வல்லார் நம்புளில்லை பூதலம் செல்லுமீன் என்றோதின அதுகேட்ட சங்கபத்மர் பூமியில் மானிடவுருவு கொண்டுவந்து அநேக புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி மகா புண்ணியக்ஷேத்திரமாகிய காசியம்பதியில்மேவிக் கங்கையிற்படிந்து அவ்விடத்திய முனிவர்களிடத்தில் தங்களுடைய விவாதங்களைச் சொன்

ஞர்கள். அவர்கள் சங்கரனே பெரியன் என்றும் அவ
ற்குள் திருமாலு மயிக்கியனென்றும் விடையளித்
தார்கள். பத்மன், கண்ணன், மேலுற்ற பேரன்பினால்
அவ்விருடிக ளுரைகளையே ஏற்காது நிற்றலை அங்ஙன
மொழிந்த முனிவர்கள் கண்டு உங்களுடைய தர்க்க
மிவ்விடத்தில் முடிவுபெறுவதன்று நீவிர் தேவேந்திர
னது சபைக்குச் செல்லுமி னென்றுரைத்தனர்.
உடனே அவ்வர வரசிருவரும் வானேறுருத்த
துத் தேவலோகம் நண்ணினர். ஆங்கு தெய்வரம்
பையரிருபுறங்கவரிவீச முப்பத்து முக்கோடி தேவர்
களும் அஷ்ட வசுக்களும் துவாத சாதித்தர்களும்
தெய்வமருத்துவரும் தும்புரு, நாரதர், முதலிய
இசைவல்லோரும் சூழப்பெற்றுச் சுதன்மை யென்
னும் சபையின்கண் சிந்தாமணி பீடத்தில் வீற்றிரு
ந்து வியாழபகவான் எடுத்துரைக்கும் நீதி சாஸ்திர
சாரங்களையெல்லாம், பயபக்தியோடு கேட்டு ஆனந்
தித்திருக்கும் பொன்னகர்க்கிறைவனை அப்பன்னகர்க்
கிறைவ ரிருவரும்சென்றுகண்டிறைஞ்சலும் தேவர்
பிரான் நீவி ரிவணடைந்த காரணமியாதென வினவ.
அவர்கள் தம் வழக்கெடுத் துரைத்தனர். அதைச்
செவியுற்ற விந்திரன் அருகிருந்த தனது குருவாகிய
வியாழபகவானைநோக்கி இவர்களை யத்தை யொழிக்க
வென வேண்டலும் பிரகஸ்பதியானவர் பண்டொரு
நாள் கயிலையங்கிரியில் பார்வதியம்மை பரமசிவனை
வணங்கி சுவாமி, மகாவிஷ்ணுவும்,தேவரீரும்,ஒன்று
யிருக்கின்ற உருவத்தைக்காண விருப்புற்றிருக்கின்
றேன். என்று அறிவிக்க, பரமசிவம், உள்மகிழ்ந்து
உமையே, அவ்வுருவங் காணவேண்டுமாயின் அரிய
தபம் செய்யவேண்டுமென்றார். உமையவள் அம்மொ

ழிகேட்டலும் யான் தவமியற்றத்தக்க ஓர் புண்ணிய ஸ்தல முரைத்தருளுமென்று வேண்டினள். சிவபி ரான் அகஸ்தியமுனிவன் வீற்றிருக்கும் பொதியமலை ச்சாரலில் புன்னைமரவடிவாய் அநேகமுனிவர்கள் தவ மியற்றுகின்றார்கள். அங்கு நீயும் சென்று தவம் புரி வையேல் திருமா[illegible] நாமு மயிக்கியமாகிய வடிவத் [illegible] [illegible]மளிப்போம். அங்ஙனம் நீ கயிலாயம் வி[illegible]வம் செய்யும்படியான அவ்விடத்தில் யாம் ம[illegible]கிழ்ந்துவசிப்போம் ஆகையால் அத்தலத்தைக் கரு[illegible]னைவர்களுக்கு முத்தி யளிப்போமென் றுரைத் தா[illegible] உடனே மலைமகள் கொழுநனை வழிபட்டு அவ் வி[illegible] நோக்கிச்செல்ல எத்தனித்தலும் தேவர்களும் அ[illegible]யர்களும், யோகீஸ்பரர் திக்குப்பாலகர்கள் முதலி[illegible]வர்களும் வந்துவணங்கி அம்மணி, நினக்குப் பணி[illegible]விடை செய்தலை விட்டிருக்க வல்லேமல்லேம் [illegible]வகளும் நின்னுடன்வந்து தொண்டுசெய்யுமாறு கட்டளை யருளவேண்டுமென்று பிரார்த்திக்க. அம் பிகை கருணைகூர்ந்து நோக்கித் தேவர்காள் நீவிர் கல்ல விருக்ஷங்களாகி நறிய புஷ்பங்களாலும் தீங்க னிகளாலும் யாம் தவம்செய்யும் புன்னைவனத்தில் மகிழ்ச்சியை யுண்டாக்குங்கள். அரம்பையர்காள் நீவிர் பசுவுருக்கொடு எமக்கு வேண்டுந்தோறும்பால் சொரிந்து எமதுளங் களிகூரும்படி செய்யவேண் டும் என்று கட்டளையிட்டாள். அதனால்தான் அவ் வம்மைக்குக் கோமதியம்மையென்றும் ஆவுடையம் மையென்றும் நாமம் உலகங்கள் புகழ விளங்குகின் றது. பின்னும் யோகீஸ்பரர் வருணன், வாயுவு, முத லிய திக்குப்பாலகர்கள் யாவர்க்கும் அவ்வவர்களுக்

குரிய பணிவிடைகளை நியமித்து முன்னதாயனுப்பி உலகமாதாவானவள் தாம்பிரபர்ணிநதிக்கு வடபக்கத்திற் பொன்மயமான மகரந்தப்பொடிகளை யுதிர்த்துக்கொண்டிருக்கும் புன்னைகவனத்தில் தன்தோழியர்கள் பணிவிடைகள் செய்து வரவந்துசேர்ந்து அவ்விடத்தில் ஆயிரம் வருடம் தன் நாயகன் மகிழுமாறு அரியதவம் புரிந்தனள். எம்பிரான் அந்தரங்க மனமுவந்து அவன்வந்துற்றுத் திருமாலும் தாமும் ஒன்றுகிய வடிவத்துடன் எம்மம்மை யுமையவளுக்குக் காட்சிகொடுத்தனர். உலகமாதா ஆனந்தக்கடலிலாழ்ந்து அஞ்சலித்துத் துதித்து நிற்கச் சிவபிரான் நினக்கு யாதுவரம் வேண்டுமென்று கேட்டனர். உமையவள் தேவரீர் பழைய திருவுருவமாக வேண்டுமென்றலும், அவ்வாறு தனது பழைய உருவத்துடன் அப்புன்னை வனத்திலும் மியமலை மகளோடு தங்கியிருப்பார். அத்தலத்தின்கண் நீங்களும்சென்று பல அறிய தவங்களைச் செய்து எம்பிராட்டி முன் கண்ட சங்கரநாராயண திருவுருவங்காணில் உங்களுடைய சந்தேகங்கள் நீங்குமென்று சொல்லியருளினுர். அவைகேட்ட வரகவரசர்கள் மிகுபுளகிதர்களாய்ச் சுரர்குருவை வணங்கி, நீவிர், கூறிய, உமை தவம்புரிந்த புன்னைவன மெவ்விடத் திருக்கின்றது சொல்லுமென்று துதித்தனர். வியாழன் சங்க பத்மர்களே வேணுவனத்திற்குத் தென்மேற்காகவும்செண்பகவனத்தின் வடகீழாகவும் களாவனத்தின்தெற்காகவும் உவணகிரியின்மேல் பக்கமாகவும் எவ்வுலகரும் புகழத்தக்க அப்புன்னைவன மிருக்கின்றது. நீவிர் ஆங்கேகி ஆங்கு ஆவுடையம்மையின் சன்னிதானத்

சங்கர நாராயணர்.

தில் சுரர்களா லாக்கப்பட்டிருக்கும், சுனையில் ஸ்நா
னம்பண்ணித் தவம் புரிவீர்களாகில் சிவபிரான் பச்
சைமாலுருப்பாதி காட்டிக் காட்சிகொடுத்து வேண்
டும் வரமீவர். ஏகுமிசொன்ன உடனே நாகங்க ளிருவ
ரும் இந்திரன் சபையினின்றிழிந்து பூதலம்வந்து
மழைபோல தேனைச் சொரியாநின்ற மலர்களையு
டைய அப்புன்னைவனத்தை யடைந்து உரகசுனையி
னீராடி சிவபிரானது சரணகமலத்தைத் தங்கள் இரு
தய கமலத்தோடு சேர்த்து மனமகிழ்ச்சியுடன் நெடு
நாளரிய தவம்புரிந்தனர். ஈங்கிப்படி நிகழ ஆதிசேட
னனவன் திருமாதுரு மார்பனடியிற்றாழ்ந்து இறை
வா னாக்கண்டனுடன் நின்னுருவம் காணும்பொரு
ட்டாய்ப் புடவியிற் பத்மன் அரியதவம் புரிகின்றான்.
என்றான். மேகவண்ணன் ஆதிசேடனே சிருஷ்டி,
திதி, திரோபவம் அனுக்கிரகம் என்னும் கிருத்திய
கருத்[...]ரும் ஏனைய சுரர்களும் சங்காரகருத்தனான
[...]னக்தியின் அம்சமேயன்றி வேறில்லை. அவனது
இடப்பக்கமாகிய எமது உருவத்தையும் அவ்விறை
வனே காட்டுவன் என்றார். வாசுகியானவன் புலியுரியுடு
த்தபுனிதன் பாற்சென்று அண்ணலேநின்னுடன் சக்
[...]யகனை யோருருக்கொடு காணவேண்டிச் சங்கன்
[...]யில் அரியதவம் புரிகின்றான் என்றான். கரியுரி
[...]போர்த்தகடவுள் வெள்ளிவரையைக்கடந்துரிஷபாரூ
டராய்வண்டுகள் மதுவுண்டுழலும் புன்னைவனத்தை
யடைந்தார். இளம்பிறைச்சந்திரன் தங்கும்படியான
மாணிக்க மலையானது, இந்திரநீலவரையோடு சேர்ந்து
வந்ததெனும்படி திரிபுவனங்களையுங்காக்குங்கடவுளா
கிய சக்கிரதரன் ஒருபாகத்திலுறும்படி அந்திவண்ண

னாகியசிவபிரான் எழுந்தருளினார். வலப்பாகத்தில் மந்தாகினிநதியும் இளம்பிறையும் விளங்கும் சடாமகுடமும் அரவக்குழையணிகாதும் வெண்ணீறணிந்த திருநுதலும் கொன்றைமாலையும் யென்புமாலையுமணிந்த தோளும் மழுப்படையேந்திய திருக்கரமும் புலித்தோலுடுத்தமருங்கும் கட்செவிக் கழலணிந்த பாதமும் விளங்கவும் இடப்பாகத்தில் சூரியப்பிரகாசமான நவரத்தின கிரீடமும் மணி மகர குண்டலங்களும் கஸ்தூரிதிலகமும் பரிதிபோன்றொளிரும் ஆழிப்படையுடைத் திருக்கையும் தேனிருந் தொழுகும் தண்டுழாய்மாலையணிந்த திருமார்பும் இடையிலொளிரும் சுவர்ண பீதாம்பரமும் வீரகண்டையணிந்த திருத்தாளும் இலங்கவும் வந்துதோன்றிய திருவுருவங்கண்டு உள்ளமுருகி யானந்தக்கடலி னலையடிபட்டுச் சாஷ்டாங்கமாகப்பணிந்து கரங்குவித்து நின்று ஆனந்த பாஷ்பம் கண்களினின்று பெருகப் பன்[illegible]ற துதித்தார்கள். அங்ஙனந்துதித்த பத்மன் தேவரீ[illegible] துளவணி பெருமானே கூறென அறியாதிருந்த அடியேற்கு இங்ஙன மருள்சுரந்தது என்பாக்கியமென்று கூறினன். அதைக்கேட்ட எம்பிரான் உங்களுக்கு வேண்டும் வரங்களைக்கேட்க. என்னலும் [illegible] வுரகர் திருமால் பிரமன்முதலிய சகலதேவர்களு[illegible] நின்னோ டயிக்கியமானார்கள். என்னும், ஞானமானது என்றும் எங்கட்கு நிலைத்திருக்கவேண்டும் தேவரீர் திருவடிகளில் முப்போதும் போதுதூவி யாங்கள் பணிவிடைசெய்து வரவேண்டும்; கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில் பாவமே யுருவாகக்கொண்ட கொடியரு[illegible] இச்சுனையில் நீராடி நின்னை வணக்கப்பெறின், சகல

பாவங்களையுங் களைந்து முத்தியடையவேண்டும் இப்புன்னைவனத்திலேயே நீவிர் வீற்றிருந்து உலகத்தோர் வேண்டும் வரங்களையெல்லா மளிக்கவேண்டுமென்று வேண்டலும் அவ்வரங்களையெல்லாம்கொடுத்து அப்புன்னை வனத்திலேயே அவ்வரவங்களுக் கன்றி மற்றவர்களுக்குத் தோன்றாது பரமன் வீற்றிருந்தான் என்றுகூற முனிவர்குழாம் அப்படி மறைந்திருந்த சிவபிரான் வெளிப்பட்டுநின்ற தெங்ஙனம் அத்திவ்விய சரித்திரத்தையும் கூறவேண்டுமென இறைஞ்சலும் சூதப்பிரமர்.

உக்கிரபாண்டியன் வழிபட்ட சரிதம்.

சிவபிரானை யொப்புற்ற மகிமைபொருந்திய குருமுனிவாழும் மலையமலையினின்றும் வைரங்களையே மணல்போல வாரிக்கொண்டு செல்லாநின்ற பொருனையாற்றங்கரையில் அரண்மனைகட்டி (சிற்றாற்றின் வடகரையில் கிலமாய்க்கிடக்கின்றது) தமிழ்நாடனைத்தும் தன்னொரு நெறிக்குள் ளடங்கச் செங்கோல் செலுத்தி வெற்றி வேலாயுதத்தை யேந்தி வெண்முத்தக்குடை நிழலில்திடபுயசிங்கம்போன்று சிற்றரசர்கள் வழிபட்டேத்த உக்கிரபாண்டியராஜன் அரசுபுரிந்து வந்தநாளில் நித்த நித்தம் வெள்ளி யம்பலவாணனாய அறுபத்து நான்கு திருவிளையாடல் புரிந்த மதுரைநாயகனையும் உலகமாதாவாயகயற்கண்ணம்மையையும் சென்று வழிபட்டு மீண்டு ராஜ்ஜிய பரிபாலனமுதலிய ஏனையகருமங்களைச் செய்வதாய் நியதிகடைப்பிடித்தும் பன்னிரண்டு கடிகை (முதற்

கெடிவிதம்) தூரத்துக்கு ஓர் குஞ்சரமாக அஞ்சலமைத்தும் நியதிநடத்துங் காலை ஓர்நாள் வழக்கம்போல் ரதம், கஜம், துரகம், பதாதி, என்னும், நால்வகைச்சேனையோடும் தனது கோயிலின்வாயிலினின்றும் கடந்து முதற்கெடி (சங்கரநயினார் கோவிலினிருந்து தெற்கே மூன்றுமயில் துலையிலுள்ள பெரிய கோவிலாங் குளத்தில் உக்கிரபாண்டியராஜன் முதற்கெடி வினாயகர் என்று காரணப் பெயர்கொண்ட வினாயரிருக்கின்றது. அதற்கு அவ்வரசனால் விடப்பட்ட மானியங்களும் நிகழ்கின்றது.) வந்திறங்கி ஆங்கு தன்னாலியற்றுவித் திருக்கும் வினாயகமூர்த்தியை யாராதித்து வழிபட்டு இரண்டாங்களிற்றின் மீதா ரோகணித்துப் படைகளோடும் புன்னைவனத்தின் வடகிழக்காகச்செல்லுங்காலை, இம்மன்னனேறிய குஞ்சரம் தஞ்சரண் பணிவனபோல தனது பெரிய கோட்டினால் பூமிபிளக்கப் பாய்ந்துவிழுந்தது. உடனே அவ்விறைவன் தரையிற்குதித்து விழுந்த காரணமறிய வேண்டிச் சொக்கநாதனைப் பிரார்த்தித்து நிற்கையில் சங்கரிசாபத்தால் புலையனாகிப் புன்னைவனத்தைப் பழுதுபாத்துவந்த மணிக்கிரீவன் வந்து வணங்கி மன்னனைத் தமாளும் அண்ணலே இப்புன்னைவனத்தைக் காக்கும் புலையன்யான் இக்காவின் மத்தியில் மிகவுயர்ந்து புதர்களை யுடையதாய்ப் புற்றொன்றிருக்கின்றது அதன்புதரனைத்தும் தொலைத்தற்பொருட்டு அப்புற்றைவெட்டினேன். ஆங்குழங்கிய பணத்தினையுடைய கட்செவியொன்றின் வால் வெட்டுண்டறுந்தது. அவ்வரவு ஆரணிகடவுட்கு அடிமையானதுபோலத் தென்படுகின்றது. என்று பன்முறையாற்றி யுரைத்தான். அரசன் தாங்கொணாப்

பெரும்புளகிதமோங்கபுலையா காட்டுகவென்று பாட்டையை நோக்குங் காலைகளினும் பிளிறி யெழுந்தது அரசன் யுத்தவீரர்கள் சகிதம், சென்று, அப்புற்றையும் அதிற் சிவலிங்கத்தையும் பக்கத்துள்ள தீர்த்தத்தையும் கண்டு ஆனந்தசாகரத்தி லமிழ்ந்தி அச்சுனையில் முழுகவெண்ணி அதன்கரையை நண்ணினபொழுது வானதேவதை அரசனே ! அரசனே ! ! என்று, கூவி நீ மிகவருந்தி நாடோறும்சென்று வழிபட்டு வரும் கூடல்நாயகன் உனதுவருத்தத்தை நீக்கி யுன்னை யாட்கொள்ளக்கருதி இவ்விடத்தில் வந்தருளினார். முன்னர் உமையவளும் கட்செவிக் கரசர்களும் தவஞ்செய்ததற்காக விடையேறுமீசன்மா லொருபாதியாகத் தனதுருவத்தைக் காட்டிய தலமீது என்றது. இதைக்கேட்டவரசன் உவமைசொல்ல முடியாத சந்தோஷத்தையடைந்து நாகசுனையில் ஸ்நானம்பண்ணி விதிப்படி அருச்சித்து வலம்வந்துசாஷ்டாங்கமாகப் பணிந்தும் சிங்மநூல் வல்லவர்க திருவாலயம் திருக்கோபுரம் முதலியவைகளைக் கட்டி, விளக்கியும் தக்க மானியங்களை விட்டும் பாரிசாதகாடும் நாணத்தக்க சிராசை என்னும் நகரத்தை யுண்டுபண்ணியும் அந்நகரத்திருந்து மூன்றுமயில் தூலையிலிருக்கிற யானைகோடு குத்திப்பாய்ந்த இடத்தில் (பெருங்கோட்டூரில்) (இவ்வூரும் அவ்வரசனாலாக்கப்பட்டதே) கோட்டியப்பன் கோவில் என ஓர் ஆலய முண்டுபண்ணியும், அவ்வாலயத்துக்கும் மானியம் முதலியவையளித்தும் சித்திரைமாசத்தில் தசாரோகணத்தில் ஆங்கணிருந்து தான் கண்டமையால் அங்குரம், (தோன்றற்குக் காரணம்) கொண்டுவந்து

சங்கரலிங்கத்துக்கும் ஆவுடையம்மைக்கும் திருவி ளாடீத்தியும் நெடுநாள் இராஜியமாண்டு இஷ்டசித் தியையடைந்து முடிவில் சிவசாயுச்சியமடைந்தான். மணிக்கிரீவனும் கயிலை வெற்படைந்தான். என்று, சொல்லி நிறுத்தினர். ரிஷிகள் மறுபடியும் நமஸ்கரி த்து இன்னும் முத்தியடைந்தவர்களின் சரிதங்களைச் சொல்லவேண்டுமென்று வேண்டலும் சூதமுனி.

தக்கணை தவம்புரிந்த சரிதம்.

மிகுவளம் பெற்றோங்கும் பிரமபுரத்தில், சதுர் வேதங்களிலும் தேர்ந்தவிண்டு சருமன் என்னும் ஓர் அந்தணனுக்கு இலக்குமியிலுஞ் சிறந்த வடிவினளா கிய தக்கணை என்னும் ஓர் புத்திரியிருந்தாள். அவ ளது ரூபலாவண்ணியத்தை காசிநாட்டுப் புட்காசன் மன் என்னும் மறையவன் புதல்வனாகிய சத்தியகீர் த்தி என்பவன் கேட்டுமையல்கொண்டு விண்டு சரும ரிடத்தில்வந்து வணங்கி நின்றான். அன்னவன்யாது ன்னூர் ஏதுன்பேர் இவன் வந்தகாரண மென்னை யென வினவினன். சத்தியகீர்த்தி தனது விருத்தாந் தத்தைச்சொல்ல விண்டுசருமனும் தனக்கு வேறு புதல்வரில்லாமையால் தன்புத்திரியை வேட்டுவந்த சத்தியகீர்த்திக்கு மணம் புரிவித்து நீவிர் சந்தோஷ மாக வாழ்கவென ஆசிகூறி அவ்விருவரையுந் தன் னில்லந்திருந்தி தான் துறவறம் பூண்டனன். பின்ன ரம்மங்கை தன் மணாளனுடன் ஓர்மாதம் போகம் நுக ர்ந்திருப்ப சத்தியகீர்த்தியு மரித்தான். என்று சொல் லலும் முனிவர் குழாம் அவனிளமையி லிறந்ததற் கும், அவள் கைமையடைந்ததற்கும் காரணமென்

னையெனக் கேட்டார்கள். சூதபுராணிகர் ஓர்வாணவன்
தேவகன்னிகையுடன் முயல் வடிவந்தரித்துப் புணர்
ந்துக்கொண்டிருக்குந் தருணத்தில் தேவனுயிரைச்
செருக்க அத்தேவகன்னிகையிட்ட சாபத்தால் இப்
பிறப்பில் தன் மனைவியுடன் இன்பம் நுகருஞ் சமை
யத்தில் சத்தியகீர்த்தியிறந்தான். முன்பிறப்பில் கவி
ஞனயிருந்த தக்கணையானவள் கற்பினிற்சிறந்த தன்
நாயகி யில்லிற்காமத்தால் வருந்தியிருக்க பரத்தை
யர்பால் போகமனுபவித்த பாவத்தால் இப்பிறப்பில்
பெண்ணாகப்பிறந்து கைமையடைய நேர்ந்தது. அவ்
வாறு கைம்மையடைந்து துக்கசாகரத்தி லாழ்ந்துவரு
ந்துஞ் சமையத்தில் காலபன் என்னும் முனிவன்
வந்து பெண்ணே நீ இப்பிறப்பையன்றி யெழுபிறப்
பும் கைமையடைய வேண்டியவளா யிருக்கின்றாய்.
ஆதலால் துக்கத்தை யொழித்துப் புண்ணிய தீர்த்
தங்க ளாடுவாயாக என்றுரைத்தனர். அப்பெண்
முனிவனுரையைச் சிரமேற்கொண்டு பற்பல புண்
ணிய தீர்த்தங்களாடியும் உண்மல மொழியாளாகிப்
புன்னைவனத்தில்வந்து சேரவும் அகந்தழுக்கு ஒழியக்
கண்டு நாகசுனையிற் படிந்து வெண்ணீறணிந்து பஞ்
சாக்ஷரத்தை யுருச்செபித்து சின்னட்டவம் புரிந்த
னள். ஓர்நாளிரவு கனவில் மழுவேந்திய வையன்
வந்துதோன்றி தக்கணையே நீ எழுபிறப்புப் பிறப்
பாய் ஒவ்வொருபிறப்புக்கும் ஒவ்வொருமகவீனுவாய்
பின்னர், நம் கயிலாயமடைவாய் என்றுகூறி மறைந்
தனரென்றார். முனிவர்கண் முனிவர் திலகனே புன்
னைவனத்தி லருந்தவம் புரிந்தும் பாவம் தீராது
தொடர்ந்ததற்குக் காரண மென்னையெனக் கேட்கச்

சூதர் உலகத்தில் கருமத்தினால் முத்தியென்றும் ஞானத்தினால் முத்தியென்றும் சற்கருமத்தினால் தெளிவடைந்த சித்தத்தினால் ஞானமீறிமுத்தியடைவலாமென்றும் பன்னூலுணர்ந்த முன்னோருரைப்பர் பெண்டிர்க்குக் கணவர்க்குப் பணிவிடை செய்தலே முக்கிய கருமமென்பர். இம்மங்கை அத்தொண்டு செய்யப்பெற்றில ளாகையால் உடனே வீடுபெறுதற்குரிய ளல்லளாகினள். என்றும் பின்னர் பிறப்புக்கு ஓர்மகவாக ஏழுபிறப்பிலும் மகப்பேறடைந்து முடிவில் புன்னைவனத்தீசனைச் சென்றிறைஞ்சி அவ்விறைவன் யாதுவரம் வேண்டுமென்ன நினதுபாதமே வேண்டுமெனவேண்டிச் சிவசாமீப மடைந்தனள். என்று சொல்லக்கேட்ட முனிவர்குழாம் இன்னும் புன்னைவனத்தின் வீறுபுகலவேண்டு மென்றனர். சூதரிஷி.

வீரசேனன் உன்மத்தம் தீர்த்தசரிதம்.

இருகரையும் முத்துக்களைக் கொழித்து வீசி அரவணைத் துயிலும் பெருமானுக்குமாலைபோன்றொளிரும் காவிரிநதிபாயும் வளம்பெற்ற சோளநாட்டில் உறந்தையம்பதிக் கிறைவனாகிய வீரசேனன் என்னும் அரசனிருந்தான். அவன் மும்மதங் களையும் பெருக்கும் நால்வாய்க்க ளிறுகளையுடைய தனதுபடைகளைக்கொண்டு உதிரவாரியினால்கடல்நீரும்சென்னீராகும்படி மாற்றார்படையைச் செகுத்துப் போர் புரியக்கூடிய திறமைவாய்ந்தவன் ஓர்நாள்நடுநிசியில் நகர்சோதனை செய்தபொழுது மின்னலும் குமுறலும் மிகுந்து பெருமழையொழிய வுடல்நடுங்கி ஓர்

அந்தணன் வீட்டையடைந்தான். ஆங்கு அவ்வந்தந்
தணன் பிதிர்தேவதைகளுக்காகக்கொண்டுவந்திருந்த
கனிகளைக்கண்டு பசியாற்கேட்டு வாங்கியருந்தி உன்
மத்தனாகி அரண்மனைபுக்கான் புகலும் அருந்ததிக்கற்
பினளாகிய அவனது தேவிநோக்கி நெஞ்சமஞ்ச அர
சனே யேதிப்படி யிருக்கின்றீர் பிராமணருடைய
பொருள்களைக் கவர்ந்தனையோ உத்தமச் சத்திரியர்
களைக் கொலைபுரிந்தனையோ நினதருளுக்கிவாழுங்
குடிகளைத் துன்புறுத்திப் பொருள் கவர்ந்தனையோ
புராண இதிகாசங்களைப் பொய்யென்றிகழ்ந்து கூறி
னையோ சிவனடியார்க்குத் துன்பம் விளைத்தனையோ
வென்று கேட்டனள். அரசன் தேவியைப்பார்த்து
நிகழ்ந்தமை கூறியும் மனமகிழ்ந்து சித்தம்பிரமித்து
டனடுங்குகின்றேன். இவ்விபத்தெங்கனமொழியுமோ
வறியேன் என்செய்வேன் பரமசிவன் மகாவிஷ்ணு
பிராமணர் இவர்களுக்குரிய பொருள்களைக் கவர்ந்த
வஞ்சகர் நூறுஜன்மம் நாயாகப் பிறக்கவேண்டுமே
என்றுரைத்தான் கேட்ட ராஜபத்தினியும் மனநொந்
திருந்தனள். பின்பு, அரசன் அமைச்சரையழைத்து
ஆலோசனைபண்ணித் தன் புதல்வனுக்கு முடிசூட்டு
வித்துத் தான் வாவுபரித்தேரேறித் தலயாத்திரைக்
காகப் புறப்பட்டு விஷ்ணுஸ்தலங்களெல்லாம் சென்
று தரிசித்து துளவணிபெம்மான் ஐய்வாயரவிற்கண்
டுயிலும் திருவனந்தபுரமடைந்து ஆங்குள்ள புண்
ணிய தீர்த்தங்களிற்படிந்து திருத்துளாய் முதலிய
நறுமலர்தூவி நாரணனைப்பணிந்தும் தானடைந்து
ள்ள உன்மத்தநோயகலாது மீண்டுவரும் வழியால்
புன்னைவனம் வந்துசேர்ந்தனன் அவனுற்று நாகசு

னையினீராடிக் கருமிடற்றண்ணல் திருவடிவணங்கி அவ்விடத்தில் கல்வி கேள்விகளிற் றேர்ந்தோனாகிய சிவசன்மன் என்னும் வேதியன் மனையையடைந்து வணங்கி அந்தணர் சிகாமணியே அடியேர்க்கு இப் புன்னைவன மான்மியத்தைப் புகலவேண்டுமென்று வேண்டி மறையவனு லறையப்பெற்றும் பஞ்சாக்கரத்தின் மகிமையையும் கூறவேண்டுமென்று வணங்கினான் சிவசன்மன் பரமசிவக்கடவுளும் தாமரைத் தவிசில் வீற்றிருக்கும் பிரமனும் நூறுண்டு மொழியினும் அமையாதபஞ்சாக்கரமகிமையை நானறிந்து சொல்ல வல்லேனோ தெரிந்தவாறுரைப்பன். முன்னாள், பஞ்சாக்கரமகிமையைக் கங்கைவேணியன்கும்பமுனிக் குபதேசித்தான். அத்தமிழ்முனிவன் இப் புன்னைவனத்திற்கு மாதந்தோறும் தரிசனத்திற்காக வந்து எனக்குபதேசித்தனன். நீ செய்த தபோபலத்தால் யான் நினக்குக் கூறுகின்றேன் கடவுளருக்குள் சிவபிரான் சிரேஷ்டமானதுபோல மந்திரங்களுக்குள் சிறந்தது. பஞ்சாக்கரம் இவ்வைந்தெழுத்தை யறியாதார். மனிதர் பிறப்பையடைந்தும் விலங்கினரா வர் பஞ்சாக்ஷர ஞானமில்லாதவர்கள் நடைப்பிணமாவார்கள். அக்கொடியரைப் பார்த்தால் சூரியனையும் அக்கினியையும் பசுவையும் பார்த்தாலல்லது பாபமொழியாது நூறுஜென்மம் பிராமணனுய்ப்பிறந்தார்க் கல்லது ஏனையோருக்கு சிவபக்தியும் பஞ்சாக்கரத்தை யாய்ந்தறிய வேண்டுமென்னும் சிந்தையுமுண்டாகாது. நாயினிரைச்சி யுண்ணும்புலையநாயினும் ஐந்தெழுத்தை யுணர்ந்தால்முனிவனுவான் உயர்ந்த பிராமணகுலத்தில் பிறந்தவனுயினும்பஞ்சாக்ஷரத்தை யறியாதவன் புலையனுவான் காசி பிரயாகை

காளஸ்திரி காஞ்சி இமயமலை நைமிசாரண்ணியம்
முதுகுன்றம் சித்தாச்சிரமம் திருமறைக்காடு மலைய
மலை, கும்பகோணம், நெல்லை, மதுரை, தில்லை, முத
லிய தலங்களில் பத்துவருஷம் பஞ்சாக்கரத்தை யுரு
ச்செபித்தபலன் இப்புன்னைவனத்தில் ஒருநா ளுருச்
செபித்தாலு மடையலாம். இத்தலத்தில் மறையிறு
திதேர்ந்த ஆசானிடத்து ஐய்ந்தெழுத்தோதி யுணர்ந்
தவர்கள் எவ்விடத்தி லிறப்பினும் கடுக்கை யந்தார்க்
கடவுள் வீற்றிருக்குங் கயிலாயமடைவார்கள் யாவர்
புன்னை வனத்தைச்சேர்ந்து துஞ்சப்பெறினும் மரிக்
குந் தருணத்தில் கடுக்கைவேணியன் ரிஷபாரூடராய்
வந்து பஞ்சாக்ஷரத்தை யோதுவாராதலால்அவரடை
யும் பெரும்பேற்றை யெடுத்துரைக்க வல்லாரில்லை
புன்னைவனத்திற்குச் செல்லுவமென வுன்னியோரடி
பெயரினும் காசிநகரத்தில் வசித்த புண்ணிய மடை
வார்கள். இப்புன்னைவனத்தில் ஒருபிடியன்னமாவது
வறியவர்க்களிப்பவர் கயிலாயபதவி யடைவார்கள்.
என்று சொல்லிநிறுத்தினன். மறுபடியும் அரசன்
உருத்திராக்க மணியின் மகிமையையும் புகலவேண்
டுமெனவேண்ட அந்தணன் உருத்திராக்கம் அக்கால
த்தில் திரிபுரவாசியாகிய இராக்கதர்களுக் காற்றாது
வானவர் பரமசிவனைச் சரண்புகுந்தனர். அப்பரமன்
அதுகாரணத்தினற் கண்ணிமையா திருந்ததில் அவர்
கண்ணினின் றுதிர்ந்த நீர்த்துளிபட்ட பூமியில் முளை
த்த தருவினின்றுண்டாகிய மணியாதலால் உருத்தி
ராக்க மணியென்று பெயர்பெற்றது. அவற்றுள்
வெண்ணிறத்ததும் பொன்னிறத்ததும் இவ்விரு நிற
ங்கலந்ததும் கருநிறத்ததும் முறையே பிரம ஷத்தி
ரிய வைசிய சூத்திர சாதிகளாகும் இவற்றில் ஒற்

றை முகமணியணியில் அரசனைக்கொன்ற பாவமும் இருமுகமணியால் கோவதைசெய்த வினையும் மும்முகமணியால் ஸ்திரிவதைசெய்த பாதகமும் நான்குமுகமணியால் அடைக்கல மடைந்தவர்களைக் கொன்றதீவினையும் ஐம்முகமணியால் புசிக்கக்கூடாத பதார்த்தங்களைப் புசித்த தீவினையும் ஷண்முகமணியால் பிரமஹத்தியும் ஏழுமுகமணியால் பிறர் பொருள்கவர்ந்த தோஷமும் எண்முகமணியால் குருத்துரோகமும் நிவர்த்தியாம் நவமுகமணியணிந்தார். நவநிதியம் பெருவர் பத்துமுக மணியணிந்தால் பேய்க்கோளணுகாது பதினொருமுகமணி பூணில் சகலயாகங்களையு மியற்றும் பலனெய்தும் பன்னிருமுகத்துமணியணிபவர் முத்தியடைவர். உடல் முழுதும் உருத்திராக்கம் புனைபவர் சந்திரசேகராகிய பரம்பொருளே தெய்வமாக வந்துறுவர் இத்தகைத்தாம் ருத்திராக்ஷமணியின்பேறு என்றுகூறினன். யரசன் மறுபடியும் திருநீற்றின்மான்மியத்தையும் நவிலவேண்டுமென்று பிரார்த்தித்தான். பிராமணன் உமையொரு பாகனது திருக்கோயிலிலுள்ள வெண்ணீறும் அந்தணர் புரியும் யாககுண்டத்தினது நீறும் பிராமணன் துறவறம் பூணுங் காலையிற்செய்யும் ஓமகுண்ட நீறும் மற்றை முக்குலத்தவர்களுக்குமாம் வேதியர்கள் நித்திய கருமம் வழுவாது புரியும் ஓமகுண்டத்தின் வெண்ணீறு அம்மறையவர்க்கன்றி யேனைவருணத் தவர்க்குத் தகாது. கறைக்கண்டனது திருநீறே சகலசாதிகளு மணியத்தக்கது. திருநீற்றைத் தலையிலணிந்தால்சந்திரனும் நெற்றியிலணிந்தால் நுதற்கண்ணும் கழுத்திலணிந்தால் நீ, நிறமும் கைகளி லணிந்தால் மான்மழுவும் உந்தியிலணிந்தாற் புலியிதளும் தரித்

தல்போலாம் பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டே திருநீற்றை முறையே தலையிலும் நெற்றியிலும் மார்பிலும் உந்தியிலும் முழங்காலிலும் கையிலும் கழுத்திலும் பிடரியிலும் அணியவேண்டும் பரமசிவனது திருநீற்றையணியாது எக்கருமம் செய்தாலும் முடிவுபெறாது. திருநீறணிந்து வழிபட்டார்க்கு முத்திசித்தியாம் இனிச் சிவபூசையாலடையும் பலனைக் கேளு அரசனே! சிவபூசை பிறவிப்பெருங்கடலைக் கடப்பதற்கு மரக்கலம்போலாம் எம்பெருமான் பூஜை பண்ணுதிருக்கும் கொடியவர்களைப் புலியாருமாசன் காட்டிற்குத் துரத்திவிடா திருப்பானேயாயின் அவ்வரசனும் பழிக்குப் பாத்திரனாவன். மண்ணினாலும் மணலினாலும் கல்லினாலும் படிகமுதலிய மணிகளாலும் பொன்முதலிய உலோகங்களினாலும் செய்யப்பட்ட லிங்கத்தை நகரிலும் மலையிலும் பூஞ்சோலையிலும் ஆற்றுத்துறையிலும் வைத்துப் பூஜித்தவர்கள் முத்தியடைவார்கள். சிவபூஜை கிரமப்படி பண்ணுது வியற்றும் சற்கருமங்கள் பயன்படாவாகும் அவர்கள் புசித்தவுணவும் நாயூனென்று வேதங்கள் முறையிடுகின்றன. சிவபிரானை முறையே பூஜித்தவர் சிருஷ்டிகருத்தனான பிறமனுடைய பதவியையும் கற்பகச்சோலைக் கிறைவனாகிய, இந்திரன்போலவிருந்து லோகபாலனம் செய்வதையும் மகாவிஷ்ணுவாயிருந்து உலகங்களைக் காக்குந் தன்மையையும் பெறுவர். என்று, கூறக்கேட்டவேந்தன் பரமசிவத்தைத்தவிற வேறுதெய்வமில்லை என்பதையோர்ந்து அம்மறையவன் றிருவடியில்வணங்கிப்பஞ்சாக்ஷரோபதேசம் பெற்றான். பஞ்சாக்ஷரம் அரசனது செவியிற்புகலும் சூரியனைக்கண்ட இருள்போல அவனு

டைய நோயான தொழிந்தன. அரசன் ஆனந்தக்கட லிலாழ்ந்து கொன்றை வேணியன் மலரடி தொழுத னன். அம்மலைமகள் கேள்வன் ரிஷபாரூடராய் வந்து தோன்றினர், அரசன் சாஷ்டாங்கமாகப் பணிந்து பேரின்பவாரியில் மூழ்கிக் கரங்குவித்துப் பரவசனு கிப் பலவாறுதுதித்து நின்றான். சிவபிரான் யாதுவ ரம்வேண்டுமென்று கேட்க அரசன் என்குலத்தவர் யாவரும் நினக்கன்பராய் முடிவில் சயிலாயபதவி யடையவேண்டுமெனவேண்டி அவ்வாறே வரம்பெற் றுத் தனது திருநகரத்துக்கு மீண்டுபோய்ப் புத்திர னுக்கு நற்புத்திபோதித்துத் தனது தேவியோடு வா னப்பிரஸ்தாச்சிரமம் கைக்கொண்டு அருந்தவம் புரிந் து சங்கரனது திருவடிக்கமலஞ் சேர்ந்தனனென்று சொல்லிமுடிக்கவும், தவசிரேஷ்டர்கள் சிவ சிவ சிவ சிவ என்று பன்முறை துதித்துக்கொண்டே சூதனை வணங்கிச் சயந்தனது சரித்திரத்தையும் சொல்லி யருளவென்று வணங்கினர்கள். முனிவர்பிரான்.

சயந்தன் வழிபட்ட சரிதம்.

புலஸ்தியப் பிரமரிஷியின் புத்திரனுகிய விச்சிர வசுவின்தேவி யானவள் அந்திவேளையிற் கலந்ததி னுல் அவள்கருப்பத்தில் அசுரனுக இராவணன் பிறந் தான். அவ்விராவணன் பிரமனைநோக்கிப் பல்லாயிர மாண்டு தவம்புரிந்து எத்தேவராலு மழிக்கமுடியாத பலம்பெற்று முறைபிறழ்ந்து இருடிகளுடைய தவ ங்களையெல்லாங் கெடுத்து மூவுலகத்துக்கும் பலவ கையான இடுக்கணியற்றிவர்தான். துஷ்ட நிக்கிரகம்

செய்து தருமத்தை நிலை நிறுத்த வேணுமென்னும் நோக்கத்தோடு மகாவிஷ்ணுவானவர் திருப்பாற் கடலில் நாகவணையில் யோகநித்திரை புரிவதை விட்டு அயோத்தி நகருக்கு இறைவனாகிய தசரதச் சக்கரவர்த்திக்குப் புத்திரனாகப்பிறந்து பாலப் பிராயத்திலேயே கோசிகன் வேள்விகாக்கச்சென்று தாடகை யென்னும் கொடியவளை மடியச்செய்து வழியிற்கிடந்த கல்லுருவைப் பெண்ணுருவாக்கி மிதிலையையடைந்து சிவசாபம் சிதைத்து சனகியை மணந்து வரும்வழியெதிர்த்த மழுப்படை யிராமன் முழுப்பலங்கவர்ந்து அயோத்தியடைந்தனன். தந்தையவர்க்கு முடிபுனைய முயலவும் கைகையால் மகுடாபிஷேகம் தடுக்கப்பட்டுப் பரதற்கு அரசளித்து இலக்குவன்சீதை இவர்களுடன் சித்திரகூடஞ்சேர்ந்தாண்டு வசியுங்காலத்தோர் நாள் பிராட்டியாரது மடியிற்றலைவைத்துத் திருக்கண் வளர்ந்தனர். அப்போழ்து இந்திரன் மைந்தனாகிய சயந்தன் என்போன் காக்கையுருக்கொடு பிராட்டியாரது திருமுலைத் தடத்திற் கொத்தினன். அவள் துன்புறக் கண்விழித்த இராமன் கனல்போன்ற அம்புதூண்டலும் ஆற்றானாகி அவ்விராகவனையே சயந்தன் சரணம்புகுந்தமையால். அவ்விரவிகுலநாதன் கோபத்தையொழித்து அபயமளித்தனன். அபய மளித்தும் கறப்புக் கணியாகிய பிராட்டியாரது தனதடத்தைத் தீண்டிய பாவத்தால் அக்காக்கை யுருமாறப் பெறானாகி மனநொந்து விண்ணுலகடைந்து பிதாவின் சபையின்கண்வந்து தனக்கு நேர்ந்ததைச் சொல்லி முறையிட்டான் அத்தேவர்பிரான் நீ புன்னைவனத்திற் சென்று சங்கரேசனை வணங்கினலன்றி இவ்வுரு நீங்காதென்று கூறிக்

கோடிசூரியப் பிரகாசமான நவரத்தின ஆரத்தைச் சயந்தன்கையிற் கொடுத்தான். அவ்வாரத்தைக்கைக் கொண்டு உடனே, புன்னையங்காவையடைந்து ஆங்குள்ள புண்ணியதீர்த்தத்திற் படிந்து சந்திரசேகரனது தோளிலுள்ள என்புமாலை மறையமணிமாலை சாத்தித் தொழுதேத்திக் காக்கையுரு நீங்கித் தன் தொல்லுருத்தாங்கி இந்திரனவையிற் சென்றான் என்று சொல்லலும் நைமிசாரணிய ரிஷிகள் மேலுமேலு முவகைபொங்கச் சூதரையாராதித்து இன்னுமப் புன்னைவனநாதன் கதையைப் புகலவேண்டுமென்று வணங்கினார்கள். சூதரிஷி மழுக்கரத்தண்ணலை வழிபட்டு.

கானவன் வீடுபெற்றசரிதம்.

நான்காம் வருணத் தவர்களுக்குந் தாழ்ந்த கானவனென்னும் புலையனொருவன் மிகுமிடியனானவன் வைப்பாற்றின் றடங்கரையின் கண்சென்று ஆவலோடு எலிபிடிப்பதற்காக நிலத்தைத் தோண்டிக்கொண்டிருந்தான். ஆங்கண் ஓர் புதையற்குடமகப்பட்டது. அப்பழநிதிக்குடத்தைச் சந்தோஷத்தோடு தனதில்லிற் கொண்டுபோய்த் தனது இழிவான குலத்தையும் தரித்திரத்தையு மறைத்துப்பூமியனைத்தும் புகழத் தக்கதாயிருந்து நாளேறவேற உண்டாகிய மமதையினால் காமவெறிகொண்டு நீதிகளைக்கடந்து நடந்துவந்தும் அப்பால் தனது மறபிற் றோன்றிய பிணையென்னு மொருகன்னிகையை மணம்புரிந்து சின்னாளம் மாதுடன்கூடி யனுபவித்தும்

தானேவந்த திரவியமனைத்தும் வீணே தொலைத்துவிட்டும் பண்டைய வரியனாய்க் மீண்டும் கொலைமுதலிய பாதகங்களைச்செய்தும் எவரும் இகழத்தக்கவனாய்விறகுச்சுமைவிற்றுக் காலங்கழித்துவரும் நாளில் ஒரு நாள் தான்கொண்டுவந்த விறகு விலைசெல்லாது அரவக்குழையணி பெம்மான் வாழும் புன்னையங்கானையடைந்து ஆங்கும் வாங்குவாரின்றி அன்றிரவெல்லாம் பசியாலுண்டாகிய களைப்பினால் நித்திரையின்றிக் கிடந்து சூரியோதயமாயினபின் தீர்த்தமருந்துவான் றொடங்கிவந் தாவச்சுனையின் றடங்கரையில் விழுந்துவருந்தினான். அங்ஙனம் வருந்திய கானவனைக்கண்ட ஆங்குதீர்த்த மொள்ளவந்த வேலைப்பழித்த விழி மடவார்கண்டு தீர்த்தத்தை வாரி வாரி யவனது வதனத்திற் றெளிக்கப்பெற்றும் மூர்ச்சை தவிராது ஜீவனீங்கினன். அப்படி நீங்கியகானவன் புன்னைவனத்தில் நித்திரையின்றி ஓரிராச்சயனித் திருந்ததினாலும் அரம்பையைப்பழித்த வணங்கினர். மகாபுண்ணிய தீர்த்தமாகிய நாகதீர்த்தத்தைத் தெளிக்கப்பெற்றதினாலும் வண்டுகள் மதுவுண்டு தியங்கும் அப்புன்னைவனத்தில் துஞ்சியதாலும் சிவதூதர்களால் கயிலைக்கு அழைக்கப்பட்டான் என்றுசொல்லி முடிக்கவும் தவசிகள் முனிசிரேஷ்டா புலையனாய்ப் பிறந்து உயிர்களைச்செகுத்து ஊன்களையருந்திவந்த பாதகனாகிய கானவன் புன்னைவனத்திற்கு வருதற்கும் நாகசுனை நீர்தெளிக்கப்பெற் றங்கு இறப்பதற்கும் என்னதவம் செய்தான் என்றுகேட்கச் சூதப்பிரமர் கானவன் முன்னைப்பிறப்பில் ஓரிடையனாய்ப் பிறந்து கைமாறின்றி ஈசனடியார்க்கு அடிமைசெய்துவந்தான் அதனா லிப்பிறப்பிற் புன்னைவனத்தை

யடைந்தான் புன்னைவன மடைந்தமையா லுரகதீர்த்தம் தெளிக்கப்பெற்றான். உரகதீர்த்தம் தெளிக்கப்பெற்றமையால் ஆங்காவி நீங்கிக் கயிலையடையப்பெற்றான். இவ்வாறு மகத்துவங்களை யறியாதவன் கயிலையடையப் பெற்றால் மகத்துவங்களை நன்றாயறிந்து வசித்துமுழுகி வணங்கினவர்கள் அடையும் பெருமையை யென்னாற்சொல்லலெளிதோ எளிதன்று என்று முடித்தார். நைமிசாரண்ணியர்கள் மறுபடியும் வழிபட்டு இன்னுமப் புன்னைவனநாதன் மகத்துவம்புகல்வாயென்ன வேண்டலும் சூதப்பிரமரிஷி.

கன்மாடன் கயிலையடைந்த சரிதம்.

தேவியாற்றங்கரையில் வாமதேவன் முதலிய மகாரிஷிகள் சங்கரிபங்கனை மலர்தூவித் தொழுது வணங்கித் தவம்புரிந்திருப்பர். ஆங்கு சிவராதன்என்னும் பிராமணனுக்குக் கன்மாடன் என்னும் பெயருடைய குமாரனிருந்தான். அவன்ஓர்நாள், தந்தையினுடையகட்டளைப்படி ஓமத்துக்கு வேண்டிய சமித்து (அரசம்சிப்பி)தற்பைஇவைகள் சம்பாதித்துக்கொண்டுவரும்வழியிலுள்ள ஆற்றில் எதிர்வந்தஓர்பசுவைச் சேற்றிற்றள்ளி மடித்தான். உடனே அக்கோவதைப் பாவத்தால் பிறமதேஜசொழிந்து இல்லம்புகுந்தான். சிவராதன் தனையனைக்கண்டு இவ்வாறு ஒளி[illegible]ருங் குறையாது பாவமியற்றினை என்றுகேட்க கன்மாடன் நிகழ்ந்தவற்றைக் கூறினன். கேட்டலு மிகவருத்த முற்று இதற்குப்பரிகாரம் நம்மாற்சொல்ல லாகா தென்றெண்ணி அந்தணரவைபுக்கு உற்றதறிவிக்க

ஆங்கொரு வேதியன் இதைப்போற் கொடியபாவம் வேறொன்றில்லை. இவனுடைய குலத்தவர்களை இருபத்தொரு தலைமுறை கொடியநரகத்தில்வீழ்விக்கும்படியானது ஆகையால் நீவிரிவனை ஒழித்துவிடுவீர்களாயின் சிவபூசை செய்கிற வுங்களை இப்பவமணுகா என்றுகூறியும் கன்மாடனைநோக்கி நீகாசி முதலிய க்ஷேத்திரங்களைத் தெரிசனம்செய்து புன்னைவனத்துக்குச்சென்று ஆங்குள்ள அரவச்சுனையிற் படிந்து முக்கட்பரமனை வணங்குவையேல் இப்பவமொழியுமென்றும் எந்தநதிகளிற் ஸ்நானம்பண்ணினாலும் புன்னைவனத்திலுள்ள நாகசுனையை நினைத்துப் படிவாராயின் அவர் பரமசிவனது உலகையடைவார் உலகத்தில் எந்தப்பாகத்திலுள்ளவர்கள் நாகசுனையை நினைத்தாலும் எமகிங்கரரால் பிடிக்கப்படார். பாவங்களையொழித்துக் கயிலையடைவார்கள். பஞ்சாக்ஷரத்தையுருச்செபித்து நாகசுனையில் மூழ்கிறவர் எவ்விடத்திற் சென்று இறப்பினும் கறைக்கண்டனுலகம் புகுவர். மார்களிமாசந்தொடங்கி மூன்றுமாதம்அச்சுனையில் மூழ்கி ஒவ்வொரு பிடியன்னங் குறைத்துண்டோர் வல்வினையனைத்தும் தீர்ந்து சிவசாயுச்சியம் பெருவர். மாசிமகத்தில் நாகசுனையிற் படிந்து தென்புலத்தவர்களுக்காக எள்முதலியவற்றை ஈவரேல் தென்புலத்தவர்களா லாசிகூறப் பெருவர். கார்த்திகையில் அச்சுனையில் மூழ்கிப் புன்னைவனநாதனை வழிபட்டவர்கள் முன்பிறப்புகளிற் செய்த தீவினைகளையெல்லாம் போக்கி இந்திரனுலகம்புகுவர் ஆவணி மாதத்து ஞாயிற்றுக்கிழமையிலும் தைமாசத்திலும்

நாகசுனையில் மூழ்கினவர்கள் சகல பாவங்களையு நீத்துவாள்வர் எந்தமாசத்திலேனும் சுக்கிர வாரத்தில் வரும் ஆயில்ய நக்ஷத்ரத்தில் நாகசுனையில் மூழ்கிச் சிவபிரானைப் பணிந்து பூசுரர்களுக்கு அமுதளித்தவர்கள் கயிலையடைவார்கள். திருவாதிரையன்று அச்சுனையில் மூழ்கினவர்கள் சுரர்களுக் கிறைவனாவார்கள். ஆயின் நித்த நித்தம் காலையில் அச்சுனையில் முழுகப்பெற்றவர்க ளடையும் பலனை அச்சிவபிரானன்றி யெவராலுஞ் சொல்லமுடியாது உமாதேவியாங்கு தவம்புரியுங்காலம் தேவகன்னிகள் தமதுருவை மாற்றி நீருருத்தாங்கி நாகசுனையி லமைந்தார்கள். ஆதலின் அச்சுனையிற் படிந்தவர்கள்பேற்றை யுரைக்கவெளிதோ ஆகையால் நீ யாங்குசெல்லுகவென்று கூறினன். அவ்வேதியனைக் கன்மாடன் வணங்கி விடைபெற்றுக் கங்கைமுதலிய சகலபுண்ணிய தீர்த்தங்களிலும் முழுகியும் பாவந்தொலையாதவனாய் வண்டுகள் செவ்வழிபாடும் புன்னைவனத்தை யடைந்து நாகசுனையிற்படிந்து சங்கரலிங்கத்தைப் பகிர்முகமாகவும் அந்தர்முகமாகவும் வணங்கிக்கொண்டு மூன்று நாள் ஆங்கிருந்தனன். எம்பிரா னருள்கூர்ந்து திங்களுங்கொன்றையு மிலங்குஞ் சடையும் அக்குமறுக்கு மணிந்த மிடறும் கரியுரிபோர்த்த புயமும் மான்மழுவேந்திய திருக்கரமும் புலித்தோலுடுத்திய இடையும் செக்கச்சிவந்த பாதமுமிலங்க ரிஷபாரூடராய்க் கன்மாடன் எதிர்வந்து தோன்றினார். அவரைக் கண்ட கன்மாடன் ஆனந்தக்கண்ணீர் ததும்ப நெஞ்சங்களிப்ப மயிர்ப்புளகமெழச் சந்தோஷக்கடலில் மூழ்கி ஆடிப்பாடி நிற்கையிற் சங்கரன் தன்னுருவத்தைக்கன்மாடனுக்கு நல்கினன். கன்மாடன் பின்னும்வந்

பட்டுக் கொன்றையந்தாரணி குழகா எவர் எத்தனை தவங்களைச் செய்தாலும் உன்னுடைய ரூபத்தை யெய்துதலரிது. நானென்ன அரியதவம் புரிந்தேன் என்னலும் சிவபிரான், நாகங்கள் தவங்களைச் செய்து முன்னந் தோண்டிய நாகசுனையில் மூழ்குவோரும் இப்புன்னைவனத்தில் வசித்து நம்மை வழிபட்டவரும் எந்தக்ஷேத்திரத்திலும் நீங்கத்தகாத கொடியபாதகங்களையும் தொலைத்து நமதருளைப்பெறுவர் பிராமணர்முதலிய எந்தவருணத்தவரும் நன்னெஞ்சோடு இப்பூ கயிலாயமடையப் பெற்றால் மோக்ஷவீட்டையடைவர் பூவுலகத்தில் ஏனைய நம்பதிகளிற் சென்று ஆயிரம் பிறப்பாகத் தவம்புரிந்தாலும் கிடையாத ஜீவன் முத்தியை யிப்புன்னைவனத்திற்சின்னாட்டவம் புரியினும் கிடைக்கும் நீ முற்பிறப்பில் உருத்திராக்க வாணிபம் செய்தனை அவற்றையணி கிலையெனினும் கையினாற் றொட்டமையால் வேதங்களை யாராய்ந்த சிவராதனுக்கு மனைவியாகிய தருமசிந்தை யென்பவள் வயிற்றுதித்தாய் நமதுபதிகடோறுமலைந்து ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கினமையால் இப்புன்னைவனத்தையடைந்து நாகசுனையிற் படிந்தாய் நாகசுனையிற் படிந்தமையால் நின்னுடைய பாவங்களையெல்லாமொழித்து எம்முருவெய்தப் பெற்றாய் இனி நீ இப்பொற்றவிசின்மீதா ரோகணித்துக் கயிலைக்கேகென்று ஓர்விமான மளித்துக் கன்மாடனைக் கயிலைக்கனுப்பிவிட்டு நாகங்களாற் பூஜித்ததாய் சிவலிங்கத்தி லமைந்தனன். என்றும் இன்னுமப் புன்னைவனநாதன் காதையைப்புகல வென்றால் முடிவுபெறுவதன்று ஆகையால் வியாசர்முன் னெனக்கோதியமட்

டில் நிறுத்துகிறேன் இத்மான்மியம் எவர்வரையப் பெறினும்கேட்கப் பெறினும்வாசிக்கப்பெறினும் பூஜிக்கப்பெறினும் புன்னையங்காவிலுறை யண்ணறன் னுலகடைவார்கள் என்றும் அவரடியார் யாவரு மெஞ்ஞான்றும் வாழி, வாழி, வாழி, என்றும் சொல்லி நிறுத்தினர்.

சங்கரநாராயண சுவாமிகோவில் மான்மியம்

முடிவுபெற்றது.